IMPACT FACTOR- 4.520 ISSN NO- 2456-7078

Volume-1, Issue-VI, Sept- 2017

# Research maGma

## An International Multidisciplinary Journal

## CONFERENCE

of

## Thiruvalluvar University College of Arts & Science, Arakkonam.

on

# "EMERGING TRENDS IN ENGLISH LANGUAGE & LITERATURE”

Research maGma
An International Multidisciplinary Journal

ISSN NO- 2456-7078 IMPACT FACTOR- 4.520 VOLUME-1, ISSUE-7, SEPT-2017

# கோதை நாயகியம்மாள் சிறுகதையில் பெண்ணியம்

[1]முனைவர்.இரா.ஜெயந்தி மற்றும் [2]சு.ஜெயலட்சுமி
[1] உதவிப் பேராசிரியர மற்றும் தமிழத்துறைத் தலைவர்இ [2]ஆய்வியல் நிறைஞர்,
[1இ2]தமிழாய்வுத்துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), தருமபுரி.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழ் இலக்கியங்களில் சங்ககாலம் முதல் இக்காலம் வரை பல இலக்கியங்கள் தோன்றிக் கொண்ட இருப்பது அனைவரும் அறிந்ததே. இலக்கிய வடிவங்களில் வெற்றி பெற்ற வடிவமாக விளங்குவது சிறுகதை வடிவமாகும். மனிதவாழ்வில் இடம் பெறும் சம்பவங்களே கதையாக இடம் பெறுகின்றன. பல பெண்ணிய எழுத்தாளர்கள், சமூகத்தில் பெண்கள் நிலை குறித்து பல்வேறு கோணங்களில் தம் சிந்தனைகளை சிறுகதைகளாக எழுதியுள்ளனர். அந்த வரிசையில் பெண்களுக்கான மொழியாக எழுதி வருபவர் கோதை நாயகி ஆவார்.

சிறுகதை என்பது குதிரைப் பந்தயத்தின் தொடக்கம் முடிவு போல் கூர்மையானதாகவும், கிளைக்கதைகள் இல்லாமல் இருக்க வேண்டும். கதையில் கூறப்படும் ஒவ்வொரு நிகழ்வும் கதையோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பன சிறுகதைக்கான வரையறைகளாகும்.

வை.மு.கோதை நாயகி எழுத்துத் துறையிலும், இசைத்துறையிலும் மேடைப் பேச்சிலும் பெரும் புகழ் பெற்றவர். பெண்களுடைய பண்புகளை மரபு மீறாமல் அவர்களுடைய ஆற்றலுக்கும் வளர்ச்சிக்கும் ஒளி விளக்காகத் திகழ்ந்தவர்.

அவர்கள் படைத்த சிறுகதையில் “தெய்வீக ஒளி” சிறுகதையில் இடம் பெற்ற பெண்களின் நிலையை ஆய்வு செய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

மூல வார்த்தைகள்:

சிறுகதைஇ சங்ககாலம்.

## பெண்ணியம்:

கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட படைப்புகளில் சிறப்பான உயிரினம் “பெண்ணே”ஆவாள். அந்தப் பெண்கள் சமுதாயத்தில் பிறப்பது முதல் இறப்பது வரை தன் கடமைகளைச் சிறப்பாக செய்து வருகின்றனர் பெண்களுக்கு குடும்பத்திலும் சமுதாயத்திலும் பல்வேறு விதமான சிக்கல்கள் தோன்றினாலும் அவற்றை சமாளிக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இறைவனால் படைக்கப் பட்டுள்ளனர்.

அப்பெண்கள் அன்பையே தன் ஆளுமையாகக் கொண்டவர்கள். இதனை "அன்பு வழிப் பேனலும் பேணப்பெறலும் பெண்டிர் மாட்டு இயலமைப்பு என்பதே பெண்மைச் சொல்லின் உண்மைப் பொருளாகும்" (திரு.வி.க. பெண்ணின் பெருமை) என்று பெண்மைக்கான இலக்கணமாக உரைத்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.

## இழந்தவாழ்வு:

நாம் வாழும் சூழ்நிலையில் ஒவ்வொருவரும் தனித்தனியே இன்ப துன்பங்களுக்கு ஆளாகின்றோம். இன்பம் வரும் போது அதன் தோற்றத்திற்கான காரணத்தை தேடுவதில்லை. ஆனால் துன்பம் வரும் போது அதற்கான காரணத்தை கண்டறிவதுடன் அதை போக்க எடுக்கும் முயற்சிகள் குமுறலையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்துகிறது.

"தெய்வீக ஒளி"என்ற சிறுகதையில் சபாாதி என்கின்றவன் எதுவும் அறியாத அப்பாவியாக உள்ளான். சூழ்நிலையால் சிறைத் தண்டனைப் பெற்று கைதியாய் நிற்கிறான். அவனது தங்கையின் நிலையே அவனது மனக் குமுறலுக்கான காரணமாகக் கூறப்படுகிறது.

12 ஆண்டுகளாக தன் குடும்பத்தை பிரிந்த ஒருவன் நிறைய எதிர்ப்பார்ப்புகளோடு குடும்பத்தைப் பார்க்க செல்கிறான். அங்கு அவனது குடும்பம் இல்லை, என்ற போது அவன் மனம்படும் வேதனைக்கு அளவே இல்லை. இந்த நிலையில் அவன் தொலைந்துபோன தன் குடும்பத்தையும் வாழ்வையும் தேடுவதாக கதையை அமைத்துள்ளார்.
வாழ்க்கையில் ஒன்றை பெற வேண்டுமென்றால் ஒன்றை இழக்க வேண்டும் என்பது நீதி. அதை உண்மைப் படுத்தும் விதமாக படைப்பாளர் தன் கதை மூலம் நமக்கு உணர்த்துகிறார். இக்கதையில் தங்கையின் வாழ்விற்காக தன் வாழ்க்கையை இழக்க நினைத்த சபாபதியை நம் முன் அடையாளப் படுத்துகிறார்.

## தங்கையின் அழகு:

காலம் கடந்து சென்ற நிலையில் தன் தங்கையைகாணச் சென்றவனுக்கு அதிர்ச்சி. ஏனெனில் சிவகாமியின் பழைய தோற்றமும் தற்போதைய தோற்றமும் கண்களில் நீர் வடியும் விதமாக அமைந்துள்ளது. சிவகாமியின் தோற்றத்தை,

"பாவாடையும் சொக்காயுமாய் அழகே உருவெடுத்தது போன்று உருண்டு திரண்டிருந்த மேனியின் பளப்பளப்புடன் தலையில் பூத்து குலுங்கும் மலர்களை கொண்ட கருந்கூந்தல் சடையுடன் மான் போல் துள்ளி விளையாடிய சிவகாமி எங்கே? "

படைப்பாளி மிக அழகாக வருணித்து உள்ளார். தன் தங்கையின் நிலையை மாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அண்ணனுக்கும் உண்டு. அதன் பொருட்டு செய்ய வேண்டிய செயல்களை சபாபதி கதாபாத்திரத்தின் மூலம் நமக்கு வழியுறுத்துகிறார்.

## சந்தேகம்:

சபாபதி தனது தங்கையான சிவகாமியை பற்றி பலரிடம் விசாரித்து, பின்பு அவளுடைய கணவனிடமே இறுதியாக விசாரிக்கின்றான். இந்நிகழ்வு மூலம் ஒரு ஆண், பெண்ணைப் பற்றி அவளுக்கு நெருங்கிய தொடர்புடையவர்களிடம் விசாரித்தால் அதை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் வழக்கம் இருப்பதை உணர முடிகிறது. ஆண், பெண் உறவைப் பேசும் போது அதை பாலுணர்வோடு தொடர்புபடுத்திக் கொச்சையாக மட்டுமே பார்க்கக் கூடிய பலருக்கு, அவர்களுடைய மனம் குழப்பத்தை மட்டுமே உருவாக்கும். இங்கு,

"உனக்கும் அவளுக்கும் என்ன உறவு என்று கேட்க தவறாகவும் நினைக்க, சபாபதி அவரின் காலில் வீழ்ந்து ஐயா நீங்கள் நினைப்பது போல் இல்லை. என் தந்தை பட்ட கடனை அடைக்கவே கேட்டேன் என்றான்"

இந்த வரிகள் மூலம் படைப்பாளர், மக்கள் அனைவரிடத்திலும் சந்தேகம் என்பது இயற்கையாக இருக்கும். அதன் உண்மை நிலை அறிந்த உடன் அச்சந்தேகம் நீங்கும் என்பதை உணர்த்துகிறார்.

### மனிதனும் பணமும்:

தந்தை பட்ட கடனைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் நம்மில் பலருக்கு இருக்கும் என நம்ப முடியாது. இன்றைய சூழலில் நீங்கள் யார்? எப்பொழுது கொடுத்தீர்? யாரிடம் கொடுத்தீர்? என கேள்வி கேட்டு மழுப்பி விடுவார்கள். ஆனால் தன் தங்கையை காண வேண்டும் என்ற எண்ணத்திலேயே தன் தந்தை கடனை அடைக்க போவதாக காட்டியிருக்கிறார். இங்கு சந்தேகப் பட்ட ஒருவன், பணம் என்ற உடனே அவனுக்கு மரியாதை கொடுத்து, தமிழரின் பண்பாட்டு முறையில் சிறப்பாக கருதப்படும் விருந்தோம்பலை செய்யும் முறை நம்மை சிந்திக்க வைக்கிறது. எனவே பணத்திற்கு தான் மரியாதையே தவிர மனிதனுக்கு இல்லை என்பதை உணர முடிகிறது.

### பழிவாங்கதுடித்தல்:

நம்முடைய அன்றாட வாழ்க்கை முறையில் பல்வேறு நிகழ்வு நடைபெறுகின்றது. அதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை காரணம் காட்டுகிறோம். அவ்வாறு காரணம் காட்டப்படும் நபர் மீது நமக்கு கோபம் அல்லது மகிழ்ச்சி இரண்டில் ஒன்று தோன்றும். மகிழ்ச்சி ஏற்பட்டால் அதனால் இன்னல்கள் ஏதும் இல்லை. கோபம் வந்தால் அது பழிவாங்கும் எண்ணமாக மாறி விடுகிறது. ஆகையால் இக்கதையில் நடராஜன் என்பவனை சபாபதி பழிவாங்க துடிக்கிறான். இவன் துடிப்புக்கு முக்கிய காரணம் தங்கையின் கண்ணீர் மல்கும் வாழ்க்கைக்கு காரணமானவன் நடராஜனே என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

நாம் ஒருவர் மீது அளவுக்கு அதிகமான பாசம் வைத்திருக்கும் பச்சத்தில் அவருக்கு வேறு ஒருவரால் துன்பம் ஏற்படும் போது, அதை கண்டு நம் மனம் வெகுண்டெழுந்து அதற்கு காரணமானவர்களை பழிவாங்க துடிக்கும். இவ்வுண்மையை யாரும் மறுக்க இயலாது.

### உமையாளின் நிலை:

ஒருவரால் நமக்கு ஆபத்து என்ற உடனே அதை எதிர் கொள்ள முடியாமல் பயத்திற்கு அடிமையாகி விடுகிறோம். அந்த பயமே நடராஜனை படுத்த படுக்கையாக்கியது. அவன் மனைவி உமையாள் சிறந்த பத்தினியாக வாழ்ந்தாள். கணவனுக்கு உடல் நிலை சரியில்லை என்றால் மனைவி மருத்துவருக்கு அடுத்த படியாக கடவுளே கதி என்று இருப்பது நம் பண்பாட்டில் ஒன்றாக கருதப்படுகிறது. இக்கதையில் பெண்களின் மனநிலையை எழுத்தாளர் மிக அழகாக எழுதியுள்ளார். கணவர் திருமணத்திற்கு முன்பு எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் அவற்றை மறந்து மன்னித்து அவனுக்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்பவள் மனைவி என்பதை எடுத்துக் கூறியுள்ளார்.

### மனம் இறங்குதல்:

வாழ்கையில் தோற்றுப் போன ஒருவன் தனது தோல்விக்கு காரணமானவனை பழிவாங்க எண்ணிய முயற்சியில் திடீர் என பின் வாங்குகிறான். அதற்கான காரணத்தைப் படைப்பாளர்,

"உமையாளின் பெரிய குழந்தை அப்பா இறந்து விடுவாரா அம்மா! என கேட்க அப்பா இறந்து விட்டால் நானும் இறந்து விடுவேன் என்று ஆத்திரம் தாங்காமல் கூறிவிடுகிறாள். அப்படியானால் நாங்கள் அப்பா, அம்மா இல்லாத அனாதைகளாகி விடுவோமா என வினா எழுப்புகின்றான்".

இந்த வரிகளில் சுட்டிக் காட்டப்பட்ட சூழ்நிலை சபாபதி எண்ணத்தை மாற்றுகிறது.

கணவனுக்காக பதிபத்தினியுடன் உண்மைத் தன்மையுடன் வாழும் உமையாளையும் அவளது குழந்தைகளையும் கண்டு மனம் இறங்குவதாக கூறுகிறார்.

வாழ்கையில் ஏற்படும் மன மாற்றத்தை இக்கதையின் மூலம் நாம் உணர முடிகிறது. தவறு செய்த ஒருவரை தண்டிப்பதால் ஏற்படும் நஷ்டத்தை நாம் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் பின்பே தீர்கமான முடிவை எடுக்க வேண்டும் என்பது புலனாகிறது.

## தெய்வீகஒளிதோன்றல்:

தன் வாழ்க்கைத்தான் முடிந்து விட்டது தன்னால் அந்தக் குழந்தைகள் அனாதையாக வேண்டுமா என நினைத்து பழி வாங்கும் முயற்சியை கைவிட்டான். தனிமையில் சென்று சிந்திக்க ஆரம்பித்த அவனது மனதில் தெய்வீக ஒளி தோன்றியது. அந்தச் சிந்தனை ஒளியே மனதை பக்குவபடுத்தி நடராஜன் உயிர் பிழைக்க வழி செய்கிறது. இந்தக் கதையில் சபாபதி நடராஜனிடம் கூறுவன,

“உன் மனைவி மக்களை கண்டு உன் தவறை மன்னித்து விட்டேன் நீ ஊர் மக்களுக்கு நல்லது செய்து உன் மனைவி மக்களுடன் நிம்மதியாக இரு என சபாபதி கூறியதை கேட்ட நடராஜன் முதலில் பயந்தான். தன் தவறை உணர்ந்தான் மன்னிப்பு கேட்டான்”

இந்த வரிகளின் மூலம் இளமையில் தான் செய்த தவறை அனைவரும் உணருவதில்லை. அவ்வாறு உணரும் ஒருவன் சமுதாயத்தில் நல்ல நிலையை அடைகின்றான். சந்தர்ப்ப சூழ்நிலை ஒருவனை குற்றவாளியாக மாற்றுகிறது. அதே பழிவாங்கும் எண்ணத்தையும் தூண்டி விடுகிறது. தெய்வீக ஒளி என்ற கதையின் தலைப்பு போல் மனப் பக்குவத்தின் காரணமாக மன்னிக்கும் பெருந்தன்மை ஏற்படுகிறது, என்பதை பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை:

பெண்ணுக்கே உரிய தனித்தன்மை கணவனிடம் அவள் கொண்டுள்ள பத்தினித் தன்மை ஆகியவற்றைக்கொண்டு ஆராயும் பொழுது சமுதாயத்தில் ஒருவன் நல்ல குணம் கொண்டவனாகவும் தீய குணம் கொண்டவனாகவும் இருப்பதற்கு காரணம் பெண்களே என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

“தெய்வீக ஒளி” என்ற சிறுகதையில் சபாபதி என்ற ஒருவனின் பழி வாங்கும் உணர்ச்சிக்கு அவன் தங்கை சிவகாமியே காரணமாகவும், அவ்வுணர்ச்சி மறைய நடராஜன் மனைவி உமையாள் காரணமாகவும் இருக்கிறார்கள்.

பெண்களின் பொறுமை எவற்றுடனும் ஒப்பிட முடியாது. உடல் பலவீனமாக இருப்பதால் பெண்கள் தாழ்ந்து போய் விடுவது இல்லை. அவள் மனைவியாக இருப்பதற்கும், தாயாக இருப்பதற்கும் ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள தன்னை பக்குவபடுத்திக் கொள்கிறாள். அத்தகைய பெண்களுக்கு சமுதாயத்திலும் குடும்பத்திலும் உயர்ந்த மதிப்பு கொடுத்து வாழ வேண்டும் என்பதை சுட்டிச் செல்கிறது இச்சிறுகதை.

## துணைநூற் பட்டியல்:

1. வை.மு.கோதை நாயகிஇ வை.மு.கோதை நாயகி கதைகள்இ முதல் பதிப்புஇ அல்லயன்ஸ் மயிலாப்பூரஇ சென்னை 2009
2. திரு.வி.கலியானசு-ந்தரனார்இ பெண்ணின் பெருமைஇ பாவை பப்ளிகேசன்ஸ்
3. சி.சுப்பிரமணிய பாரதியார் பாரதியார் கவிதைகள் லியோ புக் பப்ளிகேசன்இ சென்னை 2004.